பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 16 ஞாயிற்றுக்கிழமை (01-09-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 271



வே. பிரபாகரன்

# எமது இழப்புகளே எமக்கு உந்துசக்தி

## தலைவர் பிரபாகரன் நேற்று பேட்டி

யாழ்ப்பாணம், செப்டெம்பர் 1

போராட்ட காலத்தில் எமது இழப்புகளே எமது வளர்ச்சிக்கு உந்து சக்தியாக அமைந்தன. அவற்றை நாம் இழப்புகளாகக் கருதவில்லை. அவை எமது போராளிகளின் உறுதியை வலுப்படுத்தி, பொதுமக்களிடையே எம்மீது அனுதாபத்தையும், தங்களைப் புலிகள் காப்பாற்றுவார்கள் என்ற நம்பிக்கையையும் ஏற்படுத்தின.

— இவ்வாறு கூறினார் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன்.

தலைவர் பிரபாகரன் நேற்று நண்பகல் நல்லூரில் ஓரிடத்தில் யாழ். பத்திரிகையாளர்களுக்குப் பேட்டியளித்தார். அந்தப் பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். பேட்டியின் விவரம்:-

## பெரிய பிரதேசத்தை மீட்டுள்ளோம்!

கேள்வி:- கடந்த ஒரு வருடத்திற்கு மேல் இடம்பெற்று வரும் அரசப் படைகள் — புலிகள் போரின் பெறுபேறுகள் குறித்து உங்கள் கணிப்பீடு?

பிரபா:- தமிழீழப் பகுதியில் கூடிய பிரதேசங்களைப் போரில் வென்று எமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்திருக்கிறோம்.

பிரதானமாக கொக்காவில், மாங்குளம் முகாம்கள் வீழ்த்தப்பட்டதை அடுத்து வன்னியில் பெரிய பிரதேசத்தை மீட்டு எடுத்துள்ளோம். யாழ். கோட்டை முகாம் எமது கைகளில் வீழ்ந்ததால் இன்று யாழ். மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றார்கள்.

பெரிய அளவில் படை நகர்த்தி இராணுவத்தை முறியடிக்கும் வல்லமையை நிரூபித்திருக்கிறோம்.

ஆனையிறவு யுத்தத்தின் மூலம் மரபு ரீதியாக, தொடர்ச்சியாக நீண்ட நாட்கள் — பெரிய இராணுவ படையையே — எதிர்த்துத் தாக்குப் பிடிக்கும் வல்லமை எமக்கு உண்டு என்பதை வெளிப்படுத்திக் காட்டியிருக்கிறோம்.

மொத்தத்தில் இராணுவ ரீதியில் பெரிய வளர்ச்சி அடைந்திருக்கிறோம்.

கேள்வி:- இந்தக் காலகட்டத்தில் உங்களுக்கு ஏற்பட்ட இழப்புகள் குறித்து .....?

பிரபா:- இழப்பைப் பார்த்தால் போராட முடியாது. இழப்புக்கு அஞ்சினால் யுத்தத்தையே கைவிட வேண்டும். ஆனால் எம்மைப் பொறுத்தவரை இழப்புகள் எமக்கு, எமது வளர்ச்சிக்கு உந்து சக்தியாகவே அமைந்திருக்கின்றன. அவற்றை நாம் இழப்புகளாகக் கருதவில்லை.

எமது இழப்புகள் எங்கள் உறுப்பினர்களின் உறுதியை வலுப்படுத்தி இருக்கின்றன. பொதுமக்களிடையே எங்கள் மீது அனுதாபத்தையும், தங்களைப் புலிகள் காப்பாற்றுவார்கள் என்ற நம்பிக்கையையும் ஏற்படுத்தி இருக்கின்றன.

## 43 நாள் போரில் 564 பேர் வீரமரணம்

கேள்வி:- ஆனையிறவுப் போரில் உங்கள் இலக்கை நீங்கள் அடைய முடியாமல் போனதால் — இவ்வளவு இழப்புக்கு மத்தியிலும் அடைய முடியாமல் போனதால் — அதனை ஒரு தோல்வி என்று கருதுவீர்களா?

பிரபா:- இல்லை. இவ்வளவு இழப்பு வரும் என்று நாம் எதிர்பார்த்தோம். எமது தரப்பில் 300 போராளிகள் மடிவார்கள்; 900 பேர் வரை காயமடைவார்கள் என்று நான் போர் ஆரம்பமாவதற்கு முதல்நாளே கூறிவிட்டேன்.

ஆனால் ஆனையிறவை மீட்க ஒரு சிறிய படை அணியை கடல் வழியாக இறக்குவார்கள். அதனை முறியடித்து விட்டு முகாமை முற்றாக வீழ்த்தலாம் என எதிர்பார்த்தோம்.

ஆனால் அரசு ஆனையிறவு முகாம் விவகாரத்தை ஒரு கௌரவப் பிரச்சினையாகக் கருதி பெரிய படையெடுப்பையே நடத்தியது; பெரும் எண்ணிக்கையில் துருப்புகளைத் தரையிறக்கியது.

நாம் எதிர்பார்த்த அளவிலும் பன்மடங்கு பெரிய படையெடுப்பை நாம் எதிர்கொண்டோம். ஆனால் கடந்த 23ஆம் திகதி வரை ஆனையிறவில் நடைபெற்ற 43 நாள் சண்டையில் எமது தரப்பில் 564 போராளிகளே வீர மரணம் அடைந்தனர்.

ஸ்ரீலங்கா படைகளின் பீரங்கி மற்றும் ஷெல் தாக்குதல் வல்லமை அதிகமாக இருந்தது. வான் ரீதியாகவும் பெரும் பலத்துடன் அவர்கள் மோதினார்கள். ஆனால் அத்தகைய பெரிய எதிர்ப்புடன் ஒப்பிடுகையில் எமக்கு ஏற்பட்ட இழப்பு எதிர்பார்த்ததை விட மிகக் குறைவே.

## மக்களுக்கு தற்காலிக ஆறுதல் வரும்

கேள்வி:- தெற்கில் ஏற்பட்டு வரும் அரசியல் மாற்றங்கள், பிரேமதாஸா தலைமைக்கு ஏற்பட்டிருக்கும் அரசியல் நெருக்கடிகள் என்பன எமது போராட்டத்தில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தும் என கருதுகிறீர்களா?

பிரபா:- கொள்கை ரீதியாக பெரிய மாற்றங்களை ஏற்படுத்தமாட்டா. ஆனால் அரசு தலைமையில் ஏற்படக்கூடிய மாற்றங்கள் மக்களுக்கு தற்காலிக ஆறுதல் தரும் நிலையை உருவாக்கக்கூடும்.

அரசியல் மாற்றங்கள், சமாதான முயற்சிகள் ஏதும் இடம்பெற வாய்ப்பு ஏற்படலாம். அதனால் போர் நெருக்கடியில் சிக்கியிருக்கும் மக்களுக்கு தற்காலிக ஆறுதல் கிடைக்கும் சூழ்நிலையும் வரலாம்.

தெற்கில் பிரச்சினைகளைச் சமாளிக்கவும் அரசுக்கு ஆதரவாக செயலாற்றவும் இராணுவம் அழைக்கப்படவும் வாய்ப்புண்டு. இங்கு குவித்துள்ள இராணுவத்தை தெற்கே கொண்டு போக வேண்டிய தேவை அரசுக்கு ஏற்பட்டால், அரசப் படைகளின் நடவடிக்கைகள் எமது தாயகத்தில் மந்தமடையும் நிலை வரும்.

ஆனாலும் எமக்கு எதிராக கடுமையாகச் செயற்பட்ட லலித் அத்துலத் முதலிதான் மறுபக்கத்தில் முன்னணி வகிக்கிறார். யார் முன்னுக்கு வந்தாலும் எம்மைப் பொறுத்தவரை எல்லாம் ஒன்றுதான்.

எதையும் இப்போது கூற முடியாது; பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

## இந்தியாவில் விஷமத்தன பிரசாரம்

கேள்வி:- கொழும்பு அரசியல் நெருக்கடிகளின் பின்னணியில் இந்தியா செயற்படுகின்றது என்று கூறப்படுகிறதே.

பிரபா:- காமினி திஸநாயக்கா அதிருப்தியாளர் குழுவை வழிநடத்துவதால் அப்படிக் கருதப்படுகிறது. அதனை இப்போது கூற முடியாது. ஊர்ஜிதப்படுத்தாதவற்றை நாம் கதைப்பது பொருத்தமற்றதல்லவா?

கேள்வி:- ராஜீவ் கொலைச் சம்பவம் குறித்து விடுதலைப் புலிகள் மீது குற்றம் சுமத்தப்படுகிறதே? தமிழகத்தில் பிரசாரம் செய்யப்படுகின்றதே?

பிரபா:- இது அநாகரிகமான நிலையே. புலிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் எதுவும் ஆதாரத்துடன் நிரூபிக்கப்படவில்லை. இது தேவையற்ற குற்றச்சாட்டு. அங்கு விஷமத்தனமான பிரசாரம் நடத்தப்படுகிறது. வியாபார நோக்கங்களுக்

[5 ஆம் பக்கம் பார்க்க]

இரண்டு வாகனங்களைக் கொண்டு

## சபாநாயகர் முகம்மதுவை கொலை செய்ய முயற்சி!

கொழும்பு, செப். 1

நாடாளுமன்ற சபாநாயகர் எம். எச். முகம்மதுவை இரு வாகனங்களை வைத்து கொலை செய்ய முயற்சி நடந்திருக்கிறது.

திரு. லலித் அத்துலத் முதலி நேற்று பத்திரிகையாளர் மாநாட்டில் வைத்து இந்தத் தகவலை வெளியிட்டார்.

ஜனாதிபதி பிரேமதாஸாவை பதவி நீக்கம் செய்யக் கோரும் பிரேரணையை நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொண்டமைக்காக சபாநாயகர் முகம்மது மிரட்டப்பட்டார் என்றும் அவர் சொன்னார்.

[உ-எ-3]

## எம். பிக்களை மிரட்ட குண்டர் படைகள்!

கொழும்பு, செப். 1

ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு எதிராகத் திரும்பியிருக்கும் அரச எம். பிக்களை மிரட்டிச் சரிக்கட்டுவதற்காக நான்கு குண்டர் படைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் சீருடை அணிந்தவர்களும் இருக்கிறார்கள்.

திரு லலித் அத்துலத்முதலி இத்தகவலை நேற்று வெளியிட்டார்.

இத்தகையகுழுக்கள் கடந்த காலங்களில் செயற்பட்ட விதத்தை நினைவுகூர்ந்தால், அரசுக்கு எதிரானவர்களை இலக்கு வைத்து இக்குழுக்கள் தாக்குதலில் ஈடுபடலாம் என்பது தெளிவாகும்.

பதவி நீக்கப் பிரேரணையைக் கண்டு பீதியடைந்துள்ள திரு. பிரேமதாஸா நாட்டில் வன்முறையைத் தூண்டிவிட முயற்சிக்கிறார்.

பதவி விலகிய அமைச்சர்களுக்கு முன்பு வழங்கப்பட்ட பாதுகாப்பு திடீரென விலக்கப்பட்டிருப்பது இதனை தெளிவுபடுத்தியிருக்கிறது— இவ்வாறு அவர் மேலும் சொன்னார். [உ-எ-3]

தமக்கு பாதுகாப்பு இல்லையாம்!

## பிரிவினைவாத சக்திகளுக்கு அஞ்சுகின்றார் லலித்!!

கொழும்பு, ஆக 1

ஏனையோர் போல தானும் பிரிவினைவாத சக்திகளின் வன்முறைத் தாக்குதலுக்கும் அச்சுறுத்தலுக்கும் அஞ்ச வேண்டியிருப்பதாக திரு. லலித் அத்துலத்முதலி நேற்று தெரிவித்தார்

தமக்கு முன்னர் வழங்கப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளில் எழுபது சதவீதமானவை திடீரென முன்னறிவித்தல் எதுவும் வழங்காமலேயே விலக்கிக்கொள்ளப்பட்டிருப்பதாக அவர் சொன்னார்.

"நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பு முறை திரும்ப வேண்டும் என நான் பிரசாரம் செய்து வருவதை விரும்பாதவர்களும் என்னைத் தாக்கக் கூடும்.

நானும், அரசின் சந்தேகத்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## அவசரகாலச் சட்டத்தை நீடிக்க முடியாத நிலை!

திரு. பிரேமதாஸாவை பதவி நீக்கம் செய்யக்கோரும் பிரேரணை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரு பங்கு எம். பிக்களின் ஆதரவுடன் நிறைவேற்ற முடியாமல் போனாலும்—

நாட்டில் தொடர்ந்து சட்டம், ஒழுங்கை அவரால் பேண முடியாது நிலையே ஏற்படும் என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

நாடாளுமன்றில் அரசாங்கம் பெரும்பான்மையை இழந்திருப்பது போல் தெரிகிறது.

எனவே அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணையை மாதந்தோறும் நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முடியாத நிலை அரசுக்கு ஏற்படும்.

இதனால் ஜனாதிபதி தமது பதவியைத் தக்க வைத்துக் கொண்டாலும் அரசு கவிழ்வது உறுதி என்று எதிர்க் கட்சிகள் தெரிவிக்கின்றன.

(உ-எ-3)

## மேலும் அமைச்சர்கள் பதவிகளை துறப்பர்!

கொழும்பு, செப். 1

ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மற்றோர் அமைச்சர் நேற்று முன்தினம் ராஜினாமாச் செய்தார்.

திரு. லலித் அத்துலத் முதலி, திரு. பிரேமச்சந்திரா ஆகியோரைத் தொடர்ந்து தொழில் இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் செனிவிரத்ன தமது இராஜினமாவைச் சமர்ப்பித்தார்.

இவர்கள் மூவரினதும் இராஜினாமாக்களை ஜனாதிபதி பிரேமதாஸா ஏற்றுக் கொண்டார்.

இவர்களை விட மேலும் மூன்று அமைச்சர்கள் இராஜினாமாச் செய்யப் போவதாக தன்னிடம் கூறியுள்ளனர் என்று திரு. லலித் அத்துலத் முதலி தெரிவித்தார். [உ-எ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

வேப்பம் விதை, இலுப்பம் விதை தேவை. மில்கவைற், யாழ்ப்பாணம். [சி/0396]

சகல தரத்திற்கும் பயிற்றுவிக்க நடன ஆசிரியை தேவை. சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில் மட்டும். 7 - 10 - 91 சனிக்கிழமைக்கு முன் விண்ணப்பிக்கவும். செயலாளர், அரியாலை சனசமூக நிலையம், புங்கன் குளம். (17962)

எலுமிச்சை, மா போன்ற நாற்றுகள் உண்டுபண்ணக் கூடிய வெற்றுத் தகரப்பேணிகள் மற்றும் ஜாம் போத்தல்கள், ஜாம் போத்தல் மூடிகள் தேவை. தொடர்பு: சைவ வித்தியா விருத்திச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி. (சி-0390)

### மணமகள் தேவை

யாழ் இந்து 29 வயது நிரம்பிய டென்மார்க்கில் நிரந்தர தொழில் புரியும் மணமகனுக்கு குற்றமற்ற, படித்த, அழகான மணமகள் தேவை. நட்சத்திரம்: அத்தம். டென்மார்க்கில் வசிப்பவர்களும், டென்மார்க் செல்ல விரும்புபவர்களும் விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். யூனியன் பேக்கறி, கண்டி வீதி, சாவகச்சேரி. (17976)

### மணமகன் தேவை

கொழும்பில் பிரபல ஸ்தாபனத்தில் வேலை பார்க்கும் நல்ல குடும்பத்தைச் சேர்ந்த அழகிய யாழ். இந்து 28 வயதுடைய C.I.M.A. இறுதிப் பரீட்சை எடுக்கவுள்ள மணமகளுக்கு கணக்காளர் பதவியுடைய அல்லது அத்துறைப் படிப்பை முடிக்கவிருக்கும் அல்லது வேறு தகுந்த பதவி வகிக்கும் மணமகன் தேவை. குற்றமற்ற ஜாதகம். நட்சத்திரம்: பூரம். இல. 347, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (சி-0453)

### விண்ணப்பப்படிவம்

கல்லூரி ஆசிரியர்களுக்கான Incentive Allowance விண்ணப்பப் படிவங்கள் விற்பனைக்குண்டு. படிவம் ஒன்று ரூபா 2.50. அருண் அச்சகம், 2 ஆம் ஒழுங்கை, (ஷப்றா நிதி நிறுவனத்திற்கு அருகாமை) மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி/0430)

### ஆண்டு – 5 (புலமைப் பரிசில்)

புலமைப் பரிசில் அனுமதிப் பரீட்சைக்கேற்ப மாதிரி வினாத்தாள்கள் மாதந்தோறும் 1ஆம், 3ஆம் வாரங்களில், ஞாயிற்றுக்கிழமைகளில் வெளியிடப்படும். வினாத்தாள்களைப் பெற்று விடையளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்திக் கொடுக்கப்படும். 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (17973)

### வியாழ,செவ்வாய் மாற்றம்

ஆகஸ்ட வியாழன், செவ்வாய் மாற்றம் ரூபா. 6/50. எங்கும் விற்பனையாகின்றது. ரகுநாதன் பதிப்பகம், நவீன சந்தை, யாழ்ப்பாணம். நூலாசிரியர் Prof: சத்தியதாஸன், Mech. E, Elec.E, ஞானம்ஸ் சித்தன்கேணி. (17685)

### G. C. E. A/L 91

வர்த்தகம், பொருளியல் ஆகியவற்றின் 91 ஆம் ஆண்டுக்குரிய வினாத்தாள்கள் பெற்றுக்கொள்ளலாம். அறிவகம் புத்தகசாலை, வெலிங்டன் சந்திக்கருகாமை, யாழ்ப்பாணம். (சி-0433)

### அறிவித்தல்

வாரிவளவு நல்லியக்கச் சபை காரைநகரிலிருந்து இடம்பெயர்ந்த சிறுவர்களுக்கு நவராத்திரியை முன்னிட்டு பேச்சு, பாட்டு, தனி நடனம், குழு நடனம் யாழ்ப்பாணத்தில் நல்லை ஆதீனத்தில் 12 - 10 - 91 காலை 8-00 மணிக்கு நடத்த இருக்கிறார்கள். மேலும் விவரங்களுக்கு 88, செட்டித்தெரு, நல்லூரில் தொடர்பு கொள்ளவும். (17972)

### இடமாற்றம்

வேலணையிலும், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியிலும் இயங்கி வந்த நடன முருகன் வைத்திய நிலையம் தற்காலிகமாக ஆஸ்பத்திரி வீதி [76] 222 ஆம் இலக்கக் கட்டடத்தில [சத்திரச் சந்திக்கருகாமையில்] இடமாற்றப்பட்டுள்ளது. வைத்தியர்:- கந்தையா நவரத்தினம். (17684)

### ரைப்ரைட்டர்

Typewriters தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும், தமிழ் – ஆங்கில ரைப்பிங் வேலைகளுக்கும்; பியூடோ, 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (சி-0290)

### நோவு வைத்தியம்

ஓட்டகப்புலம் சமத்தர் நோவு எண்ணெய் எஸ். ரி. மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். (4241)

### சேவை

உங்களுடைய பழைய பாடசாலைப் பைகள் (School Bags), மகளிர் கைப் பைகள் (Ladies Hand Bags), பிரயாணப் பைகள் (Travelling Bags) என்பன மறுசீரமைத்துக் கொடுக்கப்படும். ராம்சன்ஸ் பிரயாணப் பொருட்கள் தொழிலகம், சுதுமலை வடக்கு, மானிப்பாய். (4268)

### வைத்திய சேவை

Dr. அல்பேர்ன்ஸ் அத்தனாசியார் பண்டத்தரிப்பில் 18 - 8 - 91 தொடக்கம் திரும்பவும் தமது வைத்திய சேவையை ஆரம்பித்திருக்கிறார். (17981)

### அம்பாள் திருமண சேவை

Engineers, Doctors, Accountant, B. Sc, B A ஆகிய மணமக்களுக்கு பட்டதாரி மணப்பெண்கள் தேவை. விண்ணப்ப முற்பணம் ரூபா. 50/-. சின்னச்சாமிக் குருக்கள் சண்முகஐயர், வீரமாகாளி அம்மன் கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (17688)

### இலவச திருமண சேவை

எமது சேவையில் நன்மை பெற விரும்புவர்கள் குறிப்புடன்; சகல விவரங்களையும் எழுதி, முத்திரை இடப்பட்டு சொந்த விலாசமிட்ட இரண்டு தபால் உறைகளுடன் அனுப்பவும். எம்மிடம் சகல தரத்திலும் குறிப்புகள் உண்டு. திருமதி V துரைராசா, 958/8, கே.கே.எஸ். வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். (4273)

### விண்ணப்பப் படிவம்

கல்லூரி ஆசிரியர்களுக்கான Incentive Allowance விண்ணப்பப் படிவம் விற்பனையாகின்றது. விலை ரூபா 2 50 அருண் அச்சகம், (ஷப்றா நிதி நிறுவனத்திற்கு அருகாமையில்) மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். [சி 0436]

---

அளவெட்டி தெற்கு - நாகேஸ்வரம்

# ஸ்ரீ நாகவரத நாராயணர் ரதோற்சவ மலர்

## கண்ணன் தேரில் வருகிறான்!

''எப்பொழுது உலகில் தர்மம் அழிந்து அதர்மம் அதிகரிக்கிறதோ அப்பொழுது நான் அவதரிக்கின்றேன்'' என்பது கண்ணனின் கீதை மந்திரம்.

இவ்வாறு அவதாரம் செய்யும் எம்பெருமான் அடியார்க்கிரங்கிப் பூவுலகின் கண்ணே, ஆங்காங்கு ஆலயங்களில் அமர்ந்து திருவருள் பாலிக்கிறான். கிருஷ்ணாவதாரத்திலே, ஐந்துதலைப் பாம்பில் ஆனந்த நடமிடுகிறான். ஐம்புலன்களாகிய ஐந்து தலைகளையடக்கிய ஞானியர் உள்ளத்தில் அறிதுயில் செய்கிறான் என்பது அனந்த சயனத்தின் உட்பொருளாகும். சொல்லாமற் சொன்னவர் சிவபெருமான். தூங்காமல் தூங்குபவர் கண்ணபெருமான்.

இவர்களின் இந்த நிலைகளை

''தூங்காமற் றூங்கிச் சுகப்
பெறுமாலின் விறைவில்
நீங்காமல் நிற்கும் நிலைபெற
வுங் கண்பேனோ''

என்ற தாயுமானவர் வாக்கால் சிந்திக்கலாம்.

எமது மனத் தாமரையில் இருக்கும் இறைவன், எமது பாவபுண்ணியச் செயல்களை, பார்த்துக் கொண்டிருக்கிறான். பாவிகளை மாயா இருளில் தள்ளித் துன்பத்தையும், புண்ணியர்களை மாயா இருளினின்றும் நீக்கி இன்பத்தையும் அனுபவிக்க விடுவதாலே, கண்ணனுக்கு மாயன் என்று பெயர். இந்த மாயக்கள்வன், ஆவணி மாத அபரபக்க அட்டமித் திதியில் ரோகிணி நாளில் அவதாரம் செய்த புண்ணிய தினமே கிருஷ்ண ஜயந்தியாகும். இந்நாளில் அளவெட்டி ஸ்ரீநாகேஸ்வரத்தில் எழுந்தருளிய ஸ்ரீ நாகவரத நாராயணப் பெருமான் தங்கரதமேறி வீதிவலம் வருகிறார்.

சுமார் 200 ஆண்டுகளுக்கு முன் இரண்டு பாம்புகளாகக் காட்சியளித்து, ஆவணி ரோகிணிப் பூசை ஏற்றுக் கோயில் கொண்ட நாகவரதனின் திருவருள் அற்புதம் சொல்லுந் தரமன்று.

''அப்பா-கண்ணா, நீ தந்த பிள்ளை இறந்துவிட்டானே'' என்று கதறிக் கதறிக் கொண்டு, அந்தப் பிள்ளையின் பெற்றார் ஆவேசத்தோடு இந்தத் தலத்துக்குப் பிரேதமாகக் கொண்டு வரப்பட்ட குழந்தை உயிர் பெற்றெழுந்த வரலாறு. இந்தப் பெருமானின் தேரில் சிற்பமாக அமைந்திருப்பதைக் காணலாம்.



கூன், குருடு, பேடு நீக்கி, சந்தானம் முதலிய இஷ்டசித்திகளைத்தந்து நம்பிவரும் அடியாருக்கு வரங்கொடுத்துக் கொண்டிருக்கிறான். பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு, ஸ்ரீதேவி, பூமிதேவி பாகனாக அலங்காரக் காட்சி தருகிறான்.

''முடிச்சோதியாய் உனது முகச்சோதி மலர்ந்ததுவோ'' என்று நம்மாழ்வார் பாடிய காட்சியை அடியார்கள் காணலாம்.

தாம்படும் துன்பங்களை எடுத்துச் சொல்லி, மெய்யடியார் புலம்பி வழிபடும் காட்சியும் – கற்பூரத் தீப நிரையும் உருகிப் பாடியாடும் கோலமும் அனைவரையும் பக்தி வெள்ளத்தில் நீந்த வைக்கின்றன. இத்தக் கண்ணனாகிய நாகவரதனைத் தேரில் தரிசித்து அடியார்கள் இஷ்டசித்திகள் பெறுவார்களாக.

அருட்கவி சீ. விநாசித்தம்பி

## ஸ்ரீ நாகவரதன் நமக்கருள்வான்

அடியார் இன்னல் களைய அளவெட்டி நாகேஸ்வரத்தில்

''கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன்குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர் மதியம் போல் –
முகத்தான்''

ஆவணி கிருஷ்ண ஜயந்தியிலே தங்கரதம் ஏறி வரும் கண்கொள்ளாக் காட்சியை கண்டவர் வினை போகும்.

நஞ்சும், நெருப்பும், புலியோரைப் புசிக்கும் பூதங்களும் போகும் தீமை செய்யும் கூட்டமும் தொலைந்து போகும். கானகத்தில்கண்ணுற்ற கொடுமை போகும். கொடியவர் ஆயுத பயம் போகும். திரௌபதியின் மானம் காத்த பக்த ரட்சகனாம் ஸ்ரீ நாகவரதன் தமிழ் மங்கையர் மானம் காப்பான். உள்ளம் கவர் கள்வன் தமிழர் துயர்துடைத்து, காளையர் குறிக்கோள் சேர்ப்பான்.

தேர்த் திருவிழாவாம் பெருவிழாவில் அருள் வள்ளல் ''ஸ்ரீ நாகவரதன் நமக்கருள்வான்'' என வேண்டி அடியார்களுக்கு ஆசி கூறுகின்றேன்.

அகில இலங்கை வீரசைவ குருமார
சன்னிதானப்பட்டத்தரசு
ஆலய பிரதமகுரு
டாக்டர். சிவத்திரு.
கி. உருத்திரபுரேஸ்வர சிவாச்சாரியார்.

## தமிழ் வீரர் வெற்றிபெற துணைபுரிவாய்

ஆதி நாகேஸ் வரப்பதியில்
அலங்கார ரத்தேர் ஏறிவரும்
அரங்கா முகுந்தா அபிராமா
அலைமகள் புவிமகள் மணவாளா
ஓதும் தமிழ்ப்பாப் புலவன்பின்
உவந்து சென்ற மணிவண்ணா
உருகி நெஞ்சம் தடுமாறி
உறக்க மின்றி உணவின்றி
ஏதும் புரிய இயலாமல்
ஏங்கும் நாங்கள் பரம்பரையாய்
இருந்த சொந்த மண்ணுரிமை
எமக்குக் கிடைக்க அருளரியோ
நாதன் கணேசன் கிரிபெழுதும்
நற்பா ரதத்தின் நாயகனே
நம்தமிழ் வீரர் வெற்றிபெற
நாரா யணாதுணை புரிவாயே.

''தெய்வீகக் கவி''

[சி-0457]

சிறப்பிதழ் பங்களிப்பு:

★ சிமாட்டி ஜவுளி சமுத்திரம், யாழ்ப்பாணம்.
★ விநாயகர் களஞ்சியம் ,,
★ யோகாஸ் ஆடை அகம் ,,
★ அம்பிகாபதி பான்ஸி கூட்ஸ் ,,
★ விக்னேஸ் புடைவை மாளிகை ,,
★ அசோகா ஆபரண மாளிகை ,,
★ குகன் பலசரக்கு மாளிகை, யாழ்ப்பாணம்.
★ க. கு. கந்தையாப்பிள்ளை ,,
★ எ. தியாகராஜா காரைக்காட்டு வீதி, ,,
★ கி. அந்தோனிப்பிள்ளை [அன்ரன்] குருநகர்.
★ றெஜின் டொனால்ட் ,,
★ த. பரமலிங்கம் ,,

---

## பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் படிப்புகள்

G. A. Q. 1992 ஏப்ரல்
B. A. 1991 டிசம்பர்

பொருளியல்: S. வரதராஜன் B. A (Hons)

G A Q. – சனி, ஞாயிறு 2-30 — 3-30 p m
– சனி 3 30 — 6-00 p. m
பொருளியற் தத்துவங்கள்
B. A. – ஞாயிறு 3-30 — 6-00 p. m.
பிரயோகப் பொருளியல்

கடந்த காலப் பரீட்சை வினா - விடை வகுப்புகளும் நடைபெறுகின்றன.

**ஆரம்பம்: 07 - 09 - 1991** சனிக்கிழமை

பட்டப் படிப்புகள் பிரிவு,
**பாரதிதாசன் கல்வி நிறுவனம்,**
[illegible] வீதி, யாழ்ப்பாணம்.
[சி-0432)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### வீர வேங்கை திலகன்

(காசிலிங்கம் பிரபாகரன்) திருகோணமலை

வீர ஜனனம்: 20 – 10 – 1974
வீர மரணம்: 01 – 09 – 1989

விடுதலைத் தொட்டிலில் விளையாடிய பிரபாகரன் என்னும் பிள்ளை வேங்கை வீரத் துணிவுடன் வீழ்ந்துவிட்டாய் செம் மண்ணில் வீறு கொண்ட வேங்கையாக நிலைத்துவிட்டாய். எம் மண்ணுக்காக உன்னைப் பிரிந்து தவிக்கிறோம் பிரபாகரனே! நீ மறைந்தாலும் உன் நினைவுகள் என்றென்றும் எங்கள் நெஞ்சில் நிலைத்திருக்கும் தமிழீழம் பிறக்கும் உன் வரலாறு நிலைக்கும்.

மறவாமல் மனமுருகும்
பெற்றோர், சகோதரன்,
சகோதரிகள், உறவினர்,
நண்பர்கள்.

பிரபாகரன் வீதி,
திருநெல்வேலி கொலனி.
[17994]

## வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

யாழ். பல்கலைக்கழகம் / பேராதனை

கல்வியாண்டு 1991 / 1992
கலை முதற் தேர்வு G. A. Q.
வர்த்தக முதற் தேர்வு I St IN COM.

G. S. Q. ஆகிய பாடநெறிகளுக்கான பதிவுகளை 10 - 9 - 1991 இற்கு முன் பதிவு செய்துகொள்ளவும்.

A/L இல் 3 பாடங்கள் சித்தி எய்தியவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

விரிவுரைகள் யாவும் ஆரம்பம்:
14 - 9 - 1991

விபரங்களுக்கு: நிர்வாகி.

புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(0416)

## வெற்றிடங்கள்

நிதர்சனம் நிறுவனத்தில் பின்வரும் வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

[1] தகவல் சேகரிப்பாளர்கள்
[2] தகவல் அலுவலர்கள்
[3] செய்தியாளர்கள்
[4] நிகழ்ச்சி மதிப்பீட்டாளர்கள்
[5] அறிவிப்பாளர்கள்
[6] விளம்பரம் சேகரிப்பாளர்கள்

அனுபவம், திறமை என்பவற்றிற்கேற்ப தகுந்த வேதனம் வழங்கப்படும்.

சுயவிவரங்களுடன் 1991-9-5 இற்கு முன் தொடர்பு கொள்க.

'நிதர்சனம்', திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

குறிப்பு: மேலதிக விவரங்களை நிதர்சனம் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். (17977)

வலி. கிழக்கு தெ. ப. ப. நோ. கூ. சங்கம்,
நீர்வேலி,

## பதவி வெற்றிடம்

## தட்டெழுத்தாளர் தமிழ், ஆங்கிலம்

### சம்பள அலகு 305. 13

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் யாழ் மாவட்டத்தில் வசிக்கும் இலங்கைப் பிரசைகளிடமிருந்து கோரப்படுகின்றன. சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்ப முடிவு திகதி 15 - 09 - 91 ஆகும். விண்ணப்பப் படிவங்களை ரூபா 5/- செலுத்தி தலைமைக் கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் யாவும் பொது முகாமையாளர் வலி. கிழக்கு - தென் பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி" என்ற முகவரிக்கு நேரடியாகவோ, அன்றேல் பதிவுத் தபால் மூலமோ அனுப்பப்படல் வேண்டும். தபால் உறையில் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

01. தட்டெழுத்தாளர் சம்பள அலகு 305. 13
சம்பள அளவுத் திட்டம்: 730-1055 / 20x10: 25x5

வயதெல்லை: 18-30 வருடங்கள் [சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்பட மாட்டாது.]

கல்வித் தகைமை: 6 பாடங்களில் சித்தியுடன் கூடிய க. பொ. த. ப [சா/த] சித்தியும். தமிழ் தட்டச்சில்/சிங்கள தட்டச்சில் நிமிடத்திற்கு 20 சொற்கள், ஆங்கில தட்டச்சில் நிமிடத்திற்கு 30 சொற்கள் சுதியும் இருத்தல் வேண்டும்.

[சுற்றறிக்கை இல. 108/81 இன் பிரகாரம்]

-பொது முகாமையாளர்.

நீர்வேலி,
1991 - 08 - 26. (சி/0398)

## காரைநகர்வாசி எனக் கூறியவர் முகாமுக்கு

நவாலி, செப். 1

மீன் பிடித்துக் கொண்டிருந்த சமயம் கடற்படையினரிடம் அகப்பட்ட இரு காரைநகர் வாசிகளை எந்த இடத்தைச் சேர்ந்தவர்கள் என்று கடற்படையினர் விசாரித்த போது காரைநகர் என்று பதில் அளித்தவரை கடற்படையினர் தம்முடன் அழைத்துச் சென்றனர். சுழிபுரம் என்று கூறியவரை படையினர் விடுவித்தனர் என்று கூறப்படுகிறது.

திருவடிநிலை கடல் பகுதியில் கடந்த புதன் அதிகாலை இச்சம்பவம் நடந்தது.

அப்பன் எனப்படும் 21 வயது இளைஞரே கடற்படையினரால் அழைத்துச்செல்லப்பட்டுள்ளார். (இ-100)

## ம. எண்ணெய் பற்றி அரச அதிபர் பேசுவார்

யாழ்ப்பாணம், செப். 1

வடக்கே மண்எண்ணெய் எடுத்து வருவது தொடர்பாக அரசின் நிலைப்பாடு என்ன? மண்எண்ணெய் எடுத்து வர அரசு கட்டுப்பாடு விதித்திருக்கிறதா?

யாழ். அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் இது தொடர்பாக கொழும்பில் பேச்சுவார்த்தை நடத்த இருக்கிறார். [இ-3]

## இல. கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

கொழும்பு, செப். 1

சோவியத் யூனியனில் லெனின் மற்றும் ஸ்ராலின் ஆகியோரின் சிலைகளை அகற்றியது வெட்கக்கேடான செயலாகும் என்று இலங்கைக் கம்யூனிஸ்கட்சி கண்டித்துள்ளது. (த-எ)

## சு. க. தலைவி சிறிமாவோ

கொழும்பு, செப். 1

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியை திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவே தொடர்ந்து வகிக்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு தீர்மானம் நிறைவேற்றி உள்ளது. (இ)

## 5 மேஜர்களுக்கு லெப். கேர்ணல் பதவி

ஆனையிறவு இராணுவ முகாமை மீட்கும் 'ஒப்பரேஷன் பலவேகய' இராணுவ நடவடிக்கையில் முக்கிய பங்கு வகித்த ஐந்து இராணுவ மேஜர்கள், லெப்டினன்ட் கேர்ணல் தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது. [த-எ]

## 'உயிர்த்த மனிதரின் கூத்து'

யாழ்ப்பாணம், செப். 1

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழக ஆதரவில் நாடக அரங்கக் கல்லூரி வழங்கும் ''உயிர்த்த மனிதரின் கூத்து'' நாடகம் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கும், நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கும் யாழ். பல்கலைக் கழக லைலாசபதி கலை அரங்கில் [illegible]

## கலை, வர்த்தகக் கல்லூரி

(பட்டப் படிப்புகள் பிரிவு)

## யாழ். பல்கலைக்கழக வெளிவாரி பட்டப்படிப்புகள் 91/92

(I) வணிக முதற் தேர்வு- First in Com.
(II) கலைத் தேர்வு- G. A. Q.

மேற்படி பட்டப் படிப்புகளுக்கான விரிவுரைகள் 14 - 09 - 1991 மு. ப. 8 - 00 மணிக்கு ஆரம்பமாகும்.

கணக்கியல் - ஸ்ரீ B. Com (Hons)

குறிப்பு: [I] முழுப்பாடத்திட்டமும் முடிக்கப்படும்.
[II] அச்சடித்த பாடக் குறிப்புகள் வழங்கப்படும்.
[III] விரிவுரைகளில் கலந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் தமது பெயர்களை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

பட்டப் படிப்புகள் பிரிவு,
கலை, வர்த்தகக் கல்லூரி,
(C. C. A.)
வெலிங்டன் சந்திக்கு அருகாமை,
யாழ்ப்பாணம்.

(சி/0421)

பாடசாலையிலிருந்து வெளியேறிய ஆசிரியர்களுக்கும், எழுதுவினைஞர்களுக்கும் மாணவர்களுக்குமான

## ஆங்கில நிகழ்ச்சித்திட்டம்

## (TACEP)

மேற்காட்டிய ஆங்கில நிகழ்ச்சித் திட்டம் கல்வி அமைச்சின் அனுமதியுடன் கீழே தரப்பட்டுள்ள நிலையங்களில் செப்டம்பர் 15 ஆம் திகதி ஆரம்பமாகும்.

இப்பயிற்சி நெறி மாதமொன்றிற்கு 25 மணித்தியாலயங்களாக 6 மாதங்களுக்கு சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும். (பி. ப. 1-00 — 5-30) விண்ணப்பதாரி மணித்தியாலமொன்றிற்கு ரூபா 5/- வீதம் 6 மாதங்களுக்குமான தொகையினை இரு தவணைகளில் செலுத்த வேண்டும். ஆசிரியர்கள், எழுதுவினைஞர்கள், பாடசாலைகளிலிருந்து விலகிய மாணவர்கள் ஏனைய பொதுத்துறை, தனியார்துறை ஊழியர்களும் இந்நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்றி தமது ஆங்கில மொழி ஆற்றலினை வளப்படுத்திக் கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் பெயர், விலாசம், தொழில் விவரங்களுடன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள யாழ். இந்துக் கல்லூரி முகவரிக்கு 07-09-1991 ற்கு முன் அனுப்பப்படல் வேண்டும். "TACEP" என்னும் சொல்லுடன் தெரிந்தெடுக்கும் நிலையத்தின் பெயர் தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிக்கப்பட்டு அனுப்பப்பட வேண்டும்.

இத்திட்டத்திற்கான தகுதிகாண் பரீட்சை 14 - 09 - 1991 சனிக்கிழமை மு. ப. 9-00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும். (இதற்குரிய கட்டணமாகிய ரூபா 20/- உடன் செலுத்தப்பட வேண்டும்.)

நா. தேவபாலசிங்கம்,
மாநில இணைப்பாளர்,
TACEP மத்திய நிலையம்,
யாழ். இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

பயிற்சி நிலையங்கள்:

1. யாழ். இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம். (பிரதான நிலையம்)
2. வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் [பாடசாலையிலிருந்து வெளியேறிய மாணவருக்கான விசேட நிலையம்]
3. செங்குந்தா இந்துக் கல்லூரி, கல்வியங்காடு.
4. இராமநாதன் மகளிர் கல்லூரி, மருதனார்மடம்
5. சோமஸ்கந்தாக் கல்லூரி, புத்தூர்.
6. வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை.
7. அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி.
8. விக்னேஸ்வரா ம. வித்தியாலயம், கைதடி.

[17959]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SPOKEN ENGLISH
BY
கந்தையா நவரேந்திரன்
ஆரம்பம்:- 4 - 9 - 1991 9-00 மணி
## School Of Business Administration
16, 3 ஆவது குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.
[சி-0428]



## யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்
## மகாபொல கொடுப்பனவு

மேற்படி கொடுப்பனவுக்கான ஒழுங்குகள் பின்வருமாறு செய்யப்பட்டுள்ளன.

### 9, 10ஆம் தவணைப்பணங்கள்:
முதலாம் வருடம்:

| | | |
|---|---|---|
| மருத்துவப் பீடம் | | |
| கலைப்பிரிவு ) | 02-09-1991 | 9-00—12-00 |
| வர்த்தகப்பிரிவு ) | 03-09-1991 | 1-30 — 3-00 |
| வியாபார- ) | | |
| நிர்வாகப் பிரிவு ) | 04-09-1991 | 9-00 —12-00 |
| உயிரியல்- ) | | |
| விஞ்ஞானப் பிரிவு ) | | |
| பௌதீக- ) | | |
| விஞ்ஞானப்பிரிவு | | |

### 10 ஆம் தவணைப் பணம்:
இரண்டாம் வருடம்:

| | | |
|---|---|---|
| மருத்துவ பீடம் | | |
| கலைப் பிரிவு ) | 02-09-1991 | 1-30— 3-00 |
| வர்த்தகப் பிரிவு ) | 03-09-1991 | 9-00—12-00 |
| வியாபார- ) | | |
| நிர்வாகப் பிரிவு ) | 04-09-1991 | 1-30— 3-00 |
| உயிரியல்- ) | | |
| விஞ்ஞானப் பிரிவு ) | | |
| பௌதீக- ) | | |
| விஞ்ஞானப் பிரிவு | | |

### 10 ஆம் தவணைப் பணம்:
மூன்றாம் வருடம்:

| | | |
|---|---|---|
| மருத்துவ பீடம் | | |
| கலைப் பிரிவு ) | 05-09-1991 | 9-00—12-00 |
| வர்த்தகப் பிரிவு ) | 06-09-1991 | 1-30— 3-00 |
| வியாபார- ) | | |
| நிர்வாகப் பிரிவு ) | 09-09-1991 | 9-00—12-00 |
| உயிரியல்- ) | | |
| விஞ்ஞானப் பிரிவு ) | | |
| பௌதீக- ) | | |
| விஞ்ஞானப் பிரிவு | | |

### 10 ஆம் தவணைப் பணம்:
நாலாம் வருடம்:

| | | |
|---|---|---|
| மருத்துவ பீடம் | | |
| 4-ம், 5-ம் வருடங்கள் | | |
| கலைப் பிரிவு ) | 05-09-1991 | 1-30— 3 00 |
| வர்த்தகப் பிரிவு ) | 06-09-1991 | 9 00 —12-00 |
| வியாபார- ) | | |
| நிர்வாகப் பிரிவு ) | 09-09-1991 | 1-30— 3-00 |
| உயிரியல்- ) | | |
| விஞ்ஞானப் பிரிவு ) | | |
| பௌதீக- ) | | |
| விஞ்ஞானப் பிரிவு | | |

### 8ஆம், 9ஆம் தவணைப் பணங்கள்:

| | |
|---|---|
| விவசாய பீட மாணவர்கள் | இவர்களுக்கான கொடுப்பனவு விவசாய பீடத்தில் வைத்து வழங்கப்படும். |

கொடுப்பனவின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டியவை.

1. பல்கலைக்கழக- மாணவர் அடையாள அட்டை,
2. ரூபா 2/- பெறுமதியான முத்திரை.

— பதிவாளர்.

[சி-0455]


## புதிய ரயில் நிலையம்

யாழ்ப்பாணம், செப். 1

வவுனியா; ஈரற்பெரிய குளத்தில் புதிய ரயில் நிலையம் ஒன்று நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. [இ]

## கிருஷ்ண ஜெயந்தி

யாழ்ப்பாணம், செப். 1

வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமான் கோயிலில் கிருஷ்ண ஜெயந்தி உற்சவம் இன்று ஞாயிறு மாலை 4.30 மணிக்கு நடைபெறும். நாளை மாலை 4.30 மணிக்கு வசந்த மண்டப பூஜையும் உறியடி உற்சவமும் இடம்பெறும் (த)

## நான்கு வார நிவாரணம்

யாழ்ப்பாணம், செப். 1

அகதி முகாம்களுக்கு வெளியே உறவினர்களுடன் தங்கியுள்ள இடம்பெயர்ந்தவர்களுக்கு இன்று முதலாம் திகதி தொடக்கம் நான்கு வார கால நிவாரணம் வழங்கப்பட விருக்கிறது. இதில் இரண்டு வார நிவாரணம் ஒன்றாக வழங்கப்படும். [இ-]

## பற்றறி கடத்திய 3 வாகனங்கள் தடுத்துவைப்பு

கொழும்பு, செப். 1

வடக்கே ரோச் பற்றறிகளைக் கடத்திச் செல்ல முயன்ற மூன்று வாகனங்களை வவுனியாவில் பொலீஸார் தடுத்து வைத்துள்ளனர் என்று கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

1950 டென் ரோச் பற்றறிகளையும், 8 ரோச் பற்றறிகளையும் கடத்த முயன்ற வாகனம் ஒன்றும்—

400 டென் ரோர்ச் பற்றறிகளையும் 110 ரோர்ச் பற்றறிகளையும் கடத்த முயன்ற மேலும் இரு வாகனங்களுமே தடுத்து வைக்கப்பட்டுள்ளனவாம். [இ]

## ஆஸ்பத்திரி மின் விநியோகம் சீரடைந்துள்ளது

யாழ்ப்பாணம், செப். 1

யாழ். போதனா வைத்திய சாலைக்கான மின்சார விநியோகம் சீரடைந்துள்ளது.

கடந்த நான்கு மாதங்களாகப் பழுதடைந்திருந்த 55 கே. வி ஏ. ஜெனரேட்டர் யாழ்ப்பாணத்திலேயே திருத்தப்பட்டதைத் தொடர்ந்தே ஆஸ்பத்திரிக்கான மின் விநியோகம் சீரடைய உள்ளது. (அ 3-15)

## சிவராசனின் சகா கைது

விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர் எனக் கருதப்படும் ரங்கன் என்பவரை, சென்னைப் பொலீஸார் அடையாறு என்னுமிடத்தில் வைத்து கடந்த வியாழன் கைது செய்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

அவரைக் கைது செய்ய முயன்றபோது அவர் சயனைட் உட்கொள்ள முயற்சித்தார் என்றும் —

அம்முயற்சியை பொலீஸார் தடுத்து விட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [இ]


## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### சுவாம்பிள்ளை அன்ரனிப்பிள்ளை
[பப்பா]
(இளைப்பாறிய அரச உத்தியோகத்தரும், முன்னாள் ''ஆசீர்வாதம் அச்சக'' முகாமையாளரும்)

பிறப்பு: 07 - 03 - 1901 இறப்பு: 01 - 09 - 1989

சீவியத்தில் நேசித்தோம்
மரணத்திலும் மறவோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், மைத்துனி.

38, ஈச்சமோட்டை வீதி,
கண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.
[17980]



## 45ஆம் நாள் வீரவணக்கமும் ஆத்மசாந்தி வழிபாடும்

### சாம்பமூர்த்தி குமரேசன்
[நேரு]

21 - 07 - 1991 இல் இடம்பெற்ற கட்டைக்காட்டுப் போரில் வீரமரணமடைந்த எமது மூத்த புதல்வன் சாம்பமூர்த்தி குமரேசன் [நேரு] நினைவாக 02 - 09 - 1991 இல் நடைபெறவிருக்கும் அந்தியேட்டிக் கிரியையிலும், 03 - 09 - 1991 இல் இடம்பெறவிருக்கும் ஆத்மசாந்தி வழிபாட்டிலும் காலை 9-00 மணிக்கு கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், சக போராளிகள், அன்பர்கள், சுற்றத்தவர்கள் எல்லோரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றியுடன்
க. சாம்பமூர்த்தியும்,
குடும்பத்தினரும்.

சிவன் கோவிலடி,
புத்தூர் மேற்கு,
புத்தூர்:
[16678]



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு:- 12 — 07 — 1930



உதிர்வு: 02 — 08 — 1991

### அமரர் செல்லையா சிவரத்தினம்
[ஓய்வுபெற்ற அதிபர்]

எம்மையெல்லாம் அன்புடனும், பண்புடனும், பாசத்துடனும் வாழவைத்து எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு, மீளாத் துயில் கொண்ட எமது அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் மரணச் செய்தி கேட்டு எமது துக்கத்தில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக் கிருத்தியம் இன்று 1-9-1991 இல் எமது இல்லத்தில் நடைபெறும். அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
உறவினர்கள்.

நிலவு கலட்டி,
இடைக்காடு.
[17988]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

## எதிர்வரும் 3 வாரங்கள்....!

நம்மைப் பதவி நீக்கம் செய்யக் கோரிச் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையை, நாடாளுமன்றத்தில் விவாதிக்கவும், வாக்கெடுப்புக்கு விடவும் ஒட்டாமல் செய்திருக்கிறார் ஜனாதிபதிபிரேமதாசா.

பிரேரணையில் ஒப்பமிட்ட ஐ. தே. க. உறுப்பினர்களை மனம்மாற்றித் தமது பக்கம் இழுப்பதற்காகவே பிரேமதாசா இவ்வாறு செய்திருப்பதாக அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

ஆனால் இனிவரும் மூன்று வாரங்களுக்குள்ளும் என்னென்ன மாற்றங்கள், திருப்பங்கள். திகில் சம்பவங்கள், அரசியல் குத்துவெட்டுகள், கழுத்தறுப்புகள் நடக்கும் என்று ஆருடம் கூறுவது கடினம். தமிழ்ப் பகுதிகளில் நடந்த இராணுவப் போரை விட, மிக உக்கிரமான அரசியல் போர் தென்னிலங்கையில் நடக்கும் என்பது மட்டும் திண்ணம்!

இங்கே ஒன்றை முக்கியமாகக் கவனிக்க வேண்டும். ஜனாதிபதியைப் பதவி நீக்கம் செய்ய நாடாளுமன்றத்தில் பிரேரணை கொண்டு வருவது முழுக்க முழுக்க ஓர் அரசியற் செயற்பாடு. அரசமைப்புச் சட்டத்துக்கு உட்பட்ட நடவடிக்கை.

அதனைக் கேள்விப்பட்டதும், தகவல் கிடைத்ததும் அமைச்சர்கள், செயலாளர்கள் மட்டத்தில் உள்ள அதிகாரிகளை பிரேமதாசா ஒரு அவசர மாநாட்டுக்கு அழைத்தார். முப்படைத் தளபதிகளும், பொலீஸ் மா அதிபரும் அங்கு சமுகமளித்திருந்தார்கள்! பின்னர் மூன்று தளபதிகளும், பொலீஸ் மா அதிபரும் சேர்ந்து தாம் அரசியலமைப்புக்கு விசுவாசமாக நடந்து கொள்வதாகவும், ஜனாதிபதி பிரேமதாச சட்டத்தையும், ஒழுங்கையும் நிலை நாட்டிச் சனநாயக அரசாங்கத்தைப் பேணுவதற்குச் சகல உதவிகளையும் செய்யவுள்ளதாகவும் மக்களுக்கு அறிவித்திருக்கிறார்கள்.

முப்படைகள் ஆட்சியைக் கைப்பற்றி விடலாம் என்ற மனப்பயம் திரு. பிரேமாதாசாவுக்கு உள்ளூர இருப்பதையே இந்த இரு செயல்களும் பிரதிபலிக்கின்றன. அது மட்டுமல்ல முப்படைகளையும் பயன்படுத்தி, தனக்கு எதிராகக் கிளம்பியுள்ளவர்கள் மீது சில நடவடிக்கைகளை எடுக்கவும் அவர் துணியலாம்.

முப்படைகளைப் பொறுத்தவரையில் பிரேமதாசாவுக்கு விசுவாசமானவர்கள் மட்டும் தான் இருக்கிறார்கள் என்பதல்ல! ஜே. ஆர்., காமினி, லலித், சிறிமா,ஏன், ஜே.வி.பி.க்கு விசுவாசமானவர்களும் இருக்கவே செய்வார்கள்; இருக்கிறார்கள்.

எனவே ஒரு சாரார் மறு சாராரைக் கைது செய்வதும், கடத்துவதும், தடுத்து வைப்பதும் எதிர்வரும் 3 வாரங்களிலும் சாதாரண சம்பவங்களாக மலிந்துவிடக் கூடும்! யார் அறிவார்?!

ஆகவே, இந்த மாதத்தில் தென்னிலங்கையில் எதிர்பாராத, திடீர், அரசியல் திருப்பங்கள், திகில் சம்பவங்கள் நடக்கப் போவதால் —

தமிழர் பிரச்சினை பற்றிய கருத்தும், கவனமும் அங்கு குறைந்து போகும். அது எவ்வாறு திசை மாறும் என்பது நிகழவிருக்கும் மாற்றங்களைப் பொறுத்ததே. கொழும்பில் அரசியல் ஸ்திரமின்மை உருவாகி விட்டது. அதனைத் தக்கவாறு பயன்படுத்தி உரிமைப் போராட்டத்தை மேலும் முன்னெடுக்கலாமா என்பதிலேயே தமிழர்கள் கவனம் செல்ல வேண்டும். அதுவே ராஜதந்திரம்.

# இந்தியாவில் விஷமத்தன . . . .

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

காக பத்திரிகைகள் எம்மீது அபாண்டமான குற்றச்சாட்டுகளை சுமத்தி, தாங்கள் லாபமடையப் பார்க்கிறார்கள். தமிழக மக்களாலேயே இதனைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அதனால்தான் தராசு அலுவலகத்துக்குள் புகுந்து சிலர் தாக்கியிருக்கிறார்கள் போலும்.

உண்மை நிலையை அவர்கள் உணரும்போது தாங்களாகவே எ மை மதிப்பார்கள். எம் மீதான குற்றச்சாட்டும் நீங்கும்.

கேள்வி:- ராஜீவ் கொலை தொடர்பான குற்றவாளிகள் என்று கூறப்படும் சுபா, சிவராசன் குறித்து ......?

பிரபா:- எமக்குத் தெரியாத நபர்களைப் பற்றி நாம் என்ன கூறமுடியும்?

கேள்வி:- இந்தப் போர்க் காலகட்டத்தில் மக்கள் உங்களுக்குரிய ஒத்துழைப்பைத் தந்திருக்கிறார்கள் என்று கருதுகிறீர்களா?

பிரபா:- யுத்தத்தினால் கஷ்டம் ஏற்படுவது உண்மையே. மக்கள் மத்தியில் ஏக்கம் நிலவுகிறது. வாழ்க்கை நடத்துவதில் கஷ்டம்; விலைவாசி உயர்வு போன்ற பல வேறு நெருக்கடிகள் இருந்த போதிலும் அவற்றையெல்லாம் மீறி ஆனையிறவு யுத்தத்தின் போது மக்கள் விழிப்புணர்ச்சியுடன் பொங்கி எழுந்து செயற்பட்டார்கள்; பொறுப்புணர்வுடன் நடந்து கொண்டார்கள்.

இதுவே மக்கள் யுத்தத்தில் தங்களை இணைத்துக்கொண்டதைக் காட்டப் போதுமானதாகும்.

# இயன்றவரை மக்களைக் காப்போம்

கேள்வி:- அடுத்து என்ன நடக்குமோ என்ற கேள்வி மக்கள் மத்தியில் நிலவுகிறது. யுத்தமா? பேச்சுவார்த்தையா? அடுத்தது என்ன என்ற மக்கள் எதிர்பார்ப்புக்கு தங்களின் பதில்......?

பிரபா:- மக்கள் எங்களோடு அணி திரள வேண்டும்; வீழும் போராளிகளின் ஆயுதங்களை தூக்கி போரிட முன்வரவேண்டும். அப்போது தான் போராட்டம் வெற்றி பெறும். இழப்புகள், கஷ்டங்கள் பற்றி மக்கள் மனரீதியாக உணர்ந்து கொள்ள வேண்டும். எமது கஷ்டங்கள், துன்பங்களில் மக்கள் பங்கு பற்றவேண்டும். மக்களை எம்மால் இயன்றவரை நாம் காப்பாற்றுவோம்.

மக்களும் எமது எதிரியை எதிர்த்துப் போராட மனரீதியாக வலிமை பெறவேண்டும்.

# உலக அரங்கிலேயே இனிப் பேச்சு!

கேள்வி:- அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் இனிப் பேச்சுகள் நடப்பதனால் அவை யாழ்ப்பாணத்தில் தான் நடக்குமா?

பிரபா:- பேச்சுக்குரிய சூழ்நிலை உருவாகவில்லை. அப்படி உருவானால் நடுநிலை நாடுகள் மத்தியில் — உலக அரங்கில் — நடந்தால் தான் அப்பேச்சுக்களுக்கு உரிய முக்கியத்துவம் கிடைக்கும்; அதன் பெறுமதி உணரப்படும்.

கேள்வி:- அமைச்சர் தொண்டா தன்னை நேரில் அழைத்தால் பேச்சுக்கு இங்கு வரத் தயார் என்று கூறியிருக்கிறாரே?

பிரபா:- நேரில் அழைப்பது என்றால் என்ன? பேச்சு நடத்த விரும்பினால் அவர் இங்கு வரலாம் என்று கூறி விட்டோம். அவர் விரும்பினால் வரலாம். வந்தால் நிபந்தனையற்ற முறையில் பேசலாம்.

நாங்கள் தன்னை உத்தியோகபூர்வமாக அழைத்தால் —இரு தரப்பாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட நபர் என்ற அதிகாரத்துடன் — வரலாம் என்று அவர் நினைக்கிறார் போலும்.

கேள்வி:- மீண்டும் மத்தியஸ்த முயற்சியில் ஈடுபட இந்தியா முன்வந்தால் அதனை ஏற்பீர்களா? இந்தியா எமது பிரச்சினையில் தலையிட இனி வாய்ப்பு இருப்பதாகக் கருதுகிறீர்களா?

பிரபா:- இந்தியா மட்டும் என்பதை நாம் ஏற்க மாட்டோம். சுதந்திரமான — அழுத்தம் பிரயோகிக்காத — தன்மையில் இந்தியா மத்தியஸ்தம் வகிக்கும் — பேச்சு நடத்தும் என்றால் அதனை ஏற்கலாம்.

இந்தியா எமது பிரச்சினையில் இனித் தலையிடும் என நான் கருதவில்லை அவர்களுக்கு உள்நாட்டுச் சிக்கல் ஒரு புறம்; அங்கு உறுதியான அரசு இல்லை; எல்லைப் பிரச்சினைகள் மறுபுறம்; ஏராளமான சிக்கல்களை வைத்துக் கொண்டு அவர்கள் எமது பக்கம் திரும்புவார்கள் என்று நான் நினைக்கவில்லை.

கேள்வி:- ஆனையிறவுப் போரில் வீரமரணமடைந்த போராளிகளை ஈடுசெய்யக் கூடிய அளவுக்கு போராளிகள் இயக்கத்தில் புதிதாகச் சேர்ந்திருக்கிறார்களா?

பிரபா: அதிலும் விட கூடிய எண்ணிக்கையில் போராளிகள் இணைந்திருக்கிறார்கள்; அது எமக்கு பெரு வெற்றி.

# பிரிட்டனின் நடவடிக்கை தவறானது

கேள்வி;- திரு, கிட்டுவை லண்டனிலிருந்து வெளியேற்ற எடுத்த முடிவு குறித்து என்ன கூறுகின்றீர்கள்? பிரிட்டன் இத்தகைய நடவடிக்கையை எடுக்க இந்தியாதான் தூண்டியது என்று கூறப்படுகிறதே.

பிரபா:- ஊனமடைந்த திரு. கிட்டு வைத்திய சிகிச்சைக்காக இங்கிலாந்து தூதரகத்தின் அனுமதி பெற்றே அங்கு சென்றார்.

ஊனமுற்றவரை அவரது விருப்பத்துக்கு மாறாக இலங்கைக்கு அனுப்ப பிரிட்டன் முடிவு செய்தது மிகப்பெரிய தவறாகும்.

ஆனால் இந்தியா சொல்லித்தான் பிரிட்டன் அப்படிச் செயற்பட்டது என்று கூற முடியாது; சில வேளைகளில் இலங்கை அரசும் பிரிட்டனைக் கேட்டிருக்கக் கூடும்.

இந்தியா பிரிட்டனிடம் அப்படிக் கேட்க வேண்டிய தேவை இல்லை என்றே நான் கருதுகிறேன்.

விடுதலைப் புலிகள் இயக்கப் பிரச்சினை இலங்கை அரசுக்குரியதே தவிர, இந்திய அரசுக்கு உரியதல்ல. ஏன் நாங்கள் இந்தியாவுக்கு எதிராகவா போராடுகின்றோம்?

இந்திய அழுத்தத்தில்தான் பிரிட்டன் அப்படிச் செயற்பட்டது என்றால், அது இந்திய பாதுகாப்புத் துறையின் பலவீனம் என்றே கூறவேண்டும்.

தமது நாட்டைக் காப்பாற்ற இன்னொரு நாட்டின் அமைப்புக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்படி இந்தியா பிரிட்டனை வற்புறுத்தும் என்றால் இந்தியாவின் பாதுகாப்புத்துறை எங்கே போய்விட்டது?

# மக்களுக்கே பெரும் பாதிப்பு வரும்!

கேள்வி:- ஸ்ரீலங்கா அரசு புதியரக ஆயுதங்கள், மற்றும் ஜெட் போர் விமானங்கள். போன்றவற்றைக் கொள்வனவு செய்ய இருப்பதாக கூறப்படுகிறதே. அது பெரிய தாக்கத்தை ஏற்படுத்தாதா?

பிரபா:- எல்லா ஆயுதங்களும் ஒரே மாதிரியாகத் செயற்படும். ஒரே வேலையைத்தான் செய்யும்.

ஒன்று கூடிய சேதத்தையும் மற்றையது அதிலும் குறைந்த சேதத்தையும் ஏற்படுத்தலாம். அவ்வளவுதான்.

போர் ஜெட் விமானங்கள் பெரிய தாக்கத்தை ஏற்படுத்திவிட முடியாது. முன்னைய விமானக் குண்டு வீச்சில் நான்கு வீடுகள் சேதமுற்றால், ஜெட் குண்டு வீச்சில் ஆறு வீடுகள் சேதமடையும். அவ்வளவே. இது மக்களைத் தான் அதிகம் பாதிக்கும்.

இலங்கை அரசின் ஆயுதக் கொள்வனவு எமது மக்களைத்தான் பாதிக்கப் போகிறது; மக்களுககுத்தான் உடைமைச் சேதங்களை ஏற்படுத்தப்போகிறது.

ஆனாலும் சாதாரண பதுங்கு குழிகளே இத்தகைய ஆயுதங்கள், விமானங்களில் இருந்து மக்களைப் பாதுகாத்துவிடும்.

கேள்வி:- விடுதலைப் புலிகள் 'ஈழம் வங்கி' ஒன்றை அமைக்கவிருப்பதாகத் தமக்கு தகவல் கிடைத்திருக்கின்றது என்று வடக்கிற்குப் பொறுப்பான இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் கொப்பேகடுவ கூறியிருக்கிறாரே?

பிரபா:- அது தவறு. அவருக்கு தவறான தகவல்களைக் கொடுத்திருக்கிறார்கள்.

கேள்வி:- ஈழ அகதிகளை கொழும்பிடம் ஒப்படைக்க இந்திய, தமிழக அரசுகள் நடவடிக்கை எடுத்து வருவது குறித்து......?

பிரபா:- இது இந்தியாவின் மனிதாபிமானமற்ற துரோகச் செயலைக் காட்டுகிறது. தங்களுக்கு — அரசியல் நோக்கங்களுக்குத் தேவைப்படும் போது — இங்கிருந்த மக்களைத் தூண்டி, அங்கு அகதிகளாக வரவேற்று, பயன்படுத்திவிட்டு, இப்போது தங்களுக்குத் தேவையில்லை என்ற நிலையில், அந்த அகதிகளின் நிலை பற்றிச் சிந்திக்காமல், அவர்களை எதிரிகளிடமே ஒப்படைக்க இந்தியா நடவடிக்கை எடுத்திருக்கிறது.

தாங்கள் சில சக்திகள் மீது அழுத்தம் கொடுக்க அகதிகளைப் பயன்படுத்திவிட்டு, இப்போது அவர்களை கைவிட இந்தியா முடிவெடுத்திருக்கிறது.

இதிலிருந்து நம்மக்கள் ஒரு பாடம் ஒன்றைக் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். என்ன கஷ்டம் வந்தாலும் எமது சொந்தமண்ணில் இருப்பது போன்ற பாதுகாப்பு வேறு இடத்தில் கிடையாது என்பதே அது. இங்கு வசதிகள் குறைவாக இருக்கலாம். ஆனால் யாரும் எம்மீது அழுத்தம் பிரயோகிக்க முடியாது.

கேள்வி:- இலங்கையிலிருந்து சென்ற இந்தியத் தமிழர்களும் அங்கு கொடுமைப்படுத்தப்படுகின்றனரே?

பிரபா:- அதற்கு அவர்களின் தலைவர்களே காரணம். அவர்கள் உரிய நடவடிக்கைகளை — உரிய நேரத்தில் எடுக்கத் தவறிவிட்டனர் போலும். இன்று அவர்களை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸே பிரதிநிதித்துவம் செய்கிறது. ஆனால் அவர்கள் கைது செய்யப்படும் போதும், துன்புறுத்தப்படும் போதும் அந்த அமைப்பின் தலைவர்கள் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கிறார்களே!—என்றார்.

பேட்டியின்போது திரு.பிரபாகரனுடன், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பிரதித் தலைவர் திரு. கோ. மகேந்திரராஜா (மாத்தயா), அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. யோகரத்தினம் யோகி ஆகியோரும் உடனிருந்தனர்.

## இரு போராளிகள் வீரமரணம்

யாழ்ப்பாணம், செப். 1

மணலாறு மாவட்டத்தில் நேற்று முன்தினம் ஸ்ரீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் விடுதலைப் புலிகள் போராளிகள் விக்ரர் (குமாரரட்ணம் சுபாகரன் — மட்டக்களப்பு), சிறீதரன் (குசைசப்பிள்ளை நிக்லஸ்- மூதூர்) ஆகியோர் வீரமரணமடைந்தனர். (ஓ)

## நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

## ★★★ தமிழர் தெய்வம் ★★★

உற்றதோர் சருமம் நாடி
உன்னிடம் வந்தோம் இன்று;
பெற்றதோர் நாடும் எங்கள்
பெருந்தமிழ் இனமும் வாடி
நிற்குதே நல்லூர்க் கந்தா;
நீ யெமைக் காக்க வேண்டும்
அற்புதத் தமிழா தெய்வம்
அல்லவோ! முருகா நீயும்!

-முருகனடியான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும்

டொனால்ட் கணேசகுமார்

ஞாபகார்த்த வெற்றிக்கிண்ண

## கிரிக்கெட் போட்டி

இறுதியாட்டம் இன்று

மானிப்பாய் பரிஷ் அணி

எதிர்

சென்றலைட்ஸ் (சொக்ஸ்) அணி

இடம் : யாழ். மத்திய கல்லூரி மைதானம்
நேரம்: காலை 9-00 மணி

அனைவரும் வருக !

(சி/0458) — சென்றலைட்ஸ் வி. க.



## WANTED
Nursing Superintendent

மானிப்பாய். கிறீன் ஞாபகார்த்த வைத்திய சாலைக்கு பொதுத் தாதிகள் பயிற்சி, மருத்துவப் பயிற்சியுடன் அவற்றைக் கற்பிக்கவும், நிர்வகிக்கவும் அனுபவம் உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஒப்பந்த அடிப்படையில் மாதம் ஒன்றிற்கு ரூபா 5,000/- வேதனமாக வழங்கப்படும்.

**30 - 09 - 1991க்கு முன் விண்ணப்பிக்கவும்.**

MEDICAL SUPERINTENDENT,
*Green Memorial Hospital,*
MANIPAY. (சி/0424)


## திருத்தம்

28 - 08 - 1991 ஆம் திகதி உதயனில் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு; வடக்கு, கிழக்கு மாகாணசபை ii ஆம் தர கிராம அலுவலர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரிப் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தில்-

வெற்றிடமாகவுள்ள கிராம அலுவலர் பிரிவுகள் என்ற அட்டவணையில்-

பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில்-
''ஜே/406 கற்கோவளம்'' என்பது-

தவறுதலாக இடம் பெற்றுவிட்டது என்பதை அறியத் தருகிறேன்.

கா. மாணிக்கவாசகர்,
யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரும்,
அரச அதிபரும்,
வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவை
ஆணைக்குழுவின் செயலாளருக்காக.

செயலகம்,
யாழ்ப்பாணம். (சி/0454)


## யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள் கல்வியாண்டு 1991/1992

- கலை முதற் தேர்வு — G. A. Q.
- வணிக முதற் தேர்வு — Ist. in Com

ஆகிய தேர்வுகளுக்கான விரிவுரைகள் எமது கல்வி நிறுவனத்தில் ஆரம்பமாகவுள்ளன. இரண்டு வகையான விரிவுரை வகுப்புகள் நடைபெறும்.

1. வாரநாட்களில் நடைபெறும் விரிவுரை வகுப்புகள் 8.00 a.m — 2.00 p.m வரை நடைபெறும்.
2. சனி, ஞாயிறு தினங்களில் மட்டும் நடைபெறும் விரிவுரை வகுப்புகள்.

ஆரம்பம்

| | |
|---|---|
| வார நாட்கள் விரிவுரை வகுப்பு | 23 - 09 - 1991 திங்கள் 8.00 a.m |
| சனி, ஞாயிறு விரிவுரை வகுப்பு | 28 - 09 - 1991 சனி 8.00 a m |

இவ்விரிவுரை வகுப்புகளுக்கு அனுமதி பெற விரும்பும் மாணவர்கள் 20 - 09 - 1991 க்கு முன்பாக எமது நிறுவனத்தில் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்
பட்டப்படிப்புகள் பிரிவு
பாரதிதாசன் கல்வி நிறுவனம்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[சி-0431]


## உற்சவகால நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், செப். 1

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு இடம்பெறும் இசை, சமய அரங்குகளில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள நிகழ்ச்சிகள் வருமாறு:

★ நாவலர் மணி மண்டபத்தில் — சங்கீத பூஷணம் எஸ். பத்மலிங்கத்தின் இன்னிசைக் கச்சேரி.

★ கம்பன் கோட்டத்தில்— செல்வி கனகாம்பரி பத்மநாதன், செல்வி நாகம்மா சதிர்காமர் ஆகியோரின் இன்னிசைக் கச்சேரிகள்.

★ ஆதின குருமூர்த்தி ஆலயத்தில்—திரு. ந. சிவசண்முகமூர்த்தி நிகழ்த்தும் ''கந்தரனுபூதி'' பற்றிய கதாப்பிரசங்கம்.

★ மேற்கு வீதி பிள்ளையார் கோவிலில் — கானகதாவாரிதி வை. நித்தியானந்த சர்மா நிகழ்த்தும் இராமாயணம் பற்றிய தொடர் விரிவுரையில் ''வாலிமோட்சம்'' [அ-126]

## தேர்த் திருவிழாக்கள்

யாழ்ப்பாணம், செப். 1

அளவெட்டி தெற்கு, நாகேஸ்வரம் ஸ்ரீ நாசவரத நாராயணர் தேவஸ்தானத் தேர்த்திருவிழா கிருஷ்ண ஜயந்தி தினமான இன்று காலை பத்து மணிக்கு நடைபெறும் முன்னதாக எட்டு மணிக்குச் சங்காபிஷேகம் நடைபெறும். மாலை 5 மணிக்கு உறியடி உற்சவம் இடம்பெறும்-

பொன்னாலை ஸ்ரீ வரதராசப் பெருமாள் கோவில் தேர்த் திருவிழாவும் இன்று காலை நடைபெறுகிறது. [அ-51-28]

## மோதல்

யாழ்ப்பாணம், செப். 1

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த வியாழக்கிழமை புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையேயான மோதல்கள் இடம்பெற்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

மாவடிஓடையில் நடந்த சண்டையில் ரஞ்சிதன் (இளையதம்பி கந்தசாமி—வாழைச்சேனை) வீரமரணமடைந்தார். (ஒ)

## 10 குடியரசுகள் சுதந்திரப் பிரகடனம்

மொஸ்கோ, செப். 1

சோவியத் யூனியனில் இருந்து பிரிந்து தனிநாடாக தம்மை உஸ்பெஸ்கிஸ்தான் குடியரசும் க்காகிஸ்தான் குடியரசும் நேற்று பிரகடனப் படுத்திக்கொண்டன.

இவற்றுடன் சேர்ந்து சோவியத் யூனியனில் உள்ள 15 மாநிலக் குடியரசுகளில் பத்து தம்மை சுதந்திர நாடுகளாக பிரகடனஞ் செய்துள்ளன. [ஒ-எ]

## 19 பேர் கைது

சென்னை, செப். 1

சென்னையில் 'தராசு' சஞ்சிகை அலுவலகத் தாக்குதல் தொடர்பாக இதுவரை 19 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது. [த]

## பிரிவினை....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

துக்குரியவர்கள் எனக் கருதப்படும் எம். பிக்களும் கண்காணிக்கப்படுகின்றோம்.

எமது தொலைபேசி உரையாடல்கள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் ஏற்பாட்டில் ஒற்றுக் கேட்கப்படுகின்றன.

இதற்காக பிரான்ஸில் செய்யப்பட்ட நூதனக் கருவி ஒன்றை ஜனாதிபதி வைத்திருக்கிறார்.

இந்த நூதனக் கருவி 650 தொலைபேசிகளை ஒரே சமயத்தில் ஒற்றுக் கேட்க உதவும்.''

இப்படி திரு. லலித் அத்துலத்முதலி மேலும் தெரிவித்திருக்கிறார். (உ-எ-3)

## சுவரொட்டிப் போராட்டம் கொழும்பைக் கலக்குகிறது!

கொழும்பு, செப், 1

கொழும்பு மாநகரில் சுவரொட்டிப் போராட்டம் தீவிரமாகி வருகிறது.

எங்கு பார்த்தாலும் ஸ்ரீலங்கா அரசுக்கும் பிரேமாவுக்கும் ஆதரவான—எதிரான சுவரொட்டிகள் காணப்படுகின்றன.

சுவரொட்டிகளில் மிகவும் காரசாரமான, கடுமையான சொற்பிரயோகங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளனவாம். [ஒ-3]

## மேலும் 3 அரச எம். பிக்கள் திடீரென பின்வாங்கினர்!

கொழும்பு, செப். 1

ஜனாதிபதியை பதவி நீக்கம் செய்யக்கோரும் பிரேரணையில் கையொப்பமிட்டுள்ள அரசுத்தரப்பு எம். பிக்களில் மேலும் மூவர், தாங்கள் அந்தப் பிரேரணைக்கு வழங்கிய ஆதரவை வாபஸ் வாங்கிக் கொள்வதாக சபாநாயகருக்கு அறிவித்துள்ளனர்.

அரசுப் பத்திரிகையான ''டெய்லி நியூஸ்'' இத்தகவலை நேற்று வெளியிட்டது.

இதற்கு முன்னரும் இதே போன்று 3 எம். பிக்கள் பிரேரணைக்கு தாங்கள் வழங்கிய ஆதரவை வாபஸ் பெற்றுக் கொண்டதாக நேற்று முன் தினம் ''டெய்லி நியூஸ்'' செய்தி வெளியிட்டது தெரிந்ததே. (உ-எ)

## பிரேமதாஸாவின் ஊதுகுழல்களாக தகவல் தொடர்பு சாதனங்கள்!

கொழும்பு, செப். 1

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸாவுக்கு எதிராக வெளியேறியுள்ள ஐ. தே. க. அணியினரின் கருத்துக்கள் எதுவும் ஸ்ரீ லங்காவின் தொலைத் தொடர்பு சாதனங்களில் வெளியாகவில்லை.

ஸ்ரீலங்கா வானொலி, தொலைக்காட்சி மற்றும் அரச சார்பு பத்திரிகைகள் பிரேமாவுக்கு ஆதரவான விடயங்களை மட்டும் பிரசித்தப்படுத்துகின்றன.

இது குறித்து திரு. லலித் அத்துலத் முதலியும் பி. பி. ஸி. சிங்கள சேவைக்கு நேற்று அளித்த விசேட பேட்டி ஒன்றில் கவலை தெரிவித்துள்ளார்.

தொலைத் தொடர்பு சாதனங்கள் அரசுக்கு ஆதரவாக செய்திகளை மட்டும் வெளியிடுமாறு பலவந்தப்படுத்தப்படுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில்—

சிங்கள பி. பி. ஸி. செய்திச் சேவையில் திரு. லலித் அத்துலத் முதலியின் விசேட பேட்டி ஒலிபரப்பானது. அத்துடன் சிறிமா பண்டாரநாயக்கா, நவசமசமாஜக் கட்சிச் செயலாளர் விக்கிரமபாகு கருணாரத்ன மற்றும் எதிர் அணியினரின் கருத்துக்களும் அச்செய்திச் சேவையில் இடம்பெற்றன. (உ-ஒ)

## நாடாளுமன்ற ஒத்திவைப்பு சட்டவிரோதமான செயல்!

கொழும்பு, செப். 1

நாடாளுமன்றக் கூட்டத்தொடரை ஒத்திவைத்த ஜனாதிபதியின் செயல் சட்டவிரோதமானது; அரசியல் சட்டத்திற்கு முரணானது

ஐக்கிய தேசியக்கட்சி எம். பிக்களான திரு. லலித் அத்துலத் முதலி, திரு. ஜி. எம். பிரேமச்சந்திரா, திரு. லக்ஷ்மன் செனவிரத்தின ஆகியோர் நேற்றுத் தாம் கூட்டாக நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இவ்வாறு குற்றம் சுமத்தினர்.

ஜனாதிபதியைப் பதவி நீக்கம் செய்யக் கோரும் பிரேரணை மீது விவாதம் நடத்த சபாநாயகர் ஒப்புதல் அளித்த பின்னர், நாடாளுமன்றக் கூட்டத்தொடரை ஜனாதிபதி ஒத்திவைத்த செயல் முறை கேடானது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

பிரேரணை மீதான விவாதத்தைத் தடுக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்து இருப்பது அவரது தலைமையிலான அரசு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தை இழந்துவிட்டது என்பதை அவரே ஒப்புக்கொள்வதாக அமைந்துள்ளது.

அவரின் இந்த நடவடிக்கை, அவர் நாடாளுமன்றத்தை மதித்து நடக்கத் தவறி வருகிறார் என்ற எமது குற்றச்சாட்டை நிரூபிப்பதாக அமைந்துள்ளது.

—இப்படி அவர்கள் மேலும் தெரிவித்தனர். [உ-எ-3]

## மரண அறிவித்தல்

### திருமதி ஜெயராணி பயஸ்

திருமதி ஜெயராணி பயஸ் 31 - 08 - 91 இல் சங்கானையில் காலமானார். அன்னார் சவுந்தரநாயகம் பிளாஞ்சாட் தம்பதிகளின் புத்திரியும், காலஞ் சென்ற அச்சுவேலியைச் சேர்ந்த யோன்ராஜா பயஸின் அன்பு மனைவியும், ரஞ்சன், வசந்தன் (Germany) ஆகியோரின் அன்புத் தாயாரும், இராஜதுரை பிளாஞ்சாட், செல்வராசா பிளாஞ்சாட், திருமதி ஜேயமணி ஸ்ரோரர் ஆகியோரின் அன்புச் சகோதரியும். திருமதி புஸ்பராணி விக்கினராஜா. ஜெபக்குமார் ஸ்ரோரர், சந்திரகுமார் ஸ்ரோரர், ராஜ்குமார் ஸ்ரோரர் ஆகியோரின் பெரிய தாயாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 01-09-91 ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கு சங்கானை மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

தகவல்:

தேவாலய வீதி, சங்கானை.
பு. ரஞ்சன். (மகன்)
(4275]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட் லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 1 - 09 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org